| O.S.No. 06/2022 | PW1: திரு. சம்பத் த/பெ. திரு. கோவிந்தன் | 19-08-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1 முதல் 12, 15 முதல் 18, 20 மற்றும் 28 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. ஸ்ரீ லட்சுமி வாரி பைனான்ஸ் 2012–ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தினை 1–ம் பிரதிவாதிதான் முன்நின்று ஆரம்பித்தார். அதில் கச்சப்பாளையம் தலைமை வகித்ததார். பதிவு செய்யப்பட்ட உறுப்பினர் 10 பேரும், பதிவு செய்யப்படாத உறுப்பினர்கள் 41 பேரும் என 51 பேர் பங்குதாரர்களாக இருந்து மேற்படி நிறுவவனத்தினை ஆரம்பித்தார்கள். மேற்படி நிறுவனத்தில் நான் இயக்குநராக இருந்தேன்.

2. நான் மேற்படி நிறுவனத்தில் பங்குதாரராக இருந்த வகையில் சில பேர் பங்குதாரர்களாக சேர்ந்தார்கள், சில பேர் வெளியேறினார்கள் என்றால் சரிதான். தாவாவில் சொல்லியுள்ள 7 முதல் 27 நபர்கள்தான் நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளார்களா அல்லது வேறு ஏதேனும் நபர்கள் உள்ளார்களா என்றால் வேறு சில உள்ளார்கள் என்பது தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி தெரிந்துகொண்டேன். அந்த வேறு சில நபர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளீர்களா என்றால் இல்லை.

3. மேற்படி நிதி நிறுவம் நான், 1 முதல் 7 பிரதிவாதிகள் மற்றும் விஜயசுந்தர், T.K. இளங்கோவன் ஆகியோர்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டதாக எனது வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தாவாவில் 41 பேர் பங்குதாரர்களாக இருந்தார்கள் என்று சொல்லியுள்ளீர்களா என்றால் அவ்வாறுதான் சொல்லியுள்ளேன். அவ்வாறு 41 பேர் பங்குதாரராக சேர்த்தற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. தகவல் அறியும் உரிமை சட்டத்தில் பெற்ற தகவலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

4. நாங்கள் ஒவ்வொருவரும் தலா ரூ.2,50,000/– முதலீடு செய்துதான் இந்த நிறுவனத்தை ஆரம்பித்தோம். மேற்படி நிறுவனம் அடகு வியாபாரத்திற்காகவும், வட்டிக்கு பணம் கொடுப்பதற்காகவும் ஆரம்பிக்கப்பட்டது

என்றால் சரிதான். அடகு வியாபாரம் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சில ஆண்டுகளிலேயே முடிக்கப்பட்டது என்றால் 2018-ம் ஆண்டிலேயே முடிக்கப்பட்டது. 2018-ல் அடகு வியாபாரம் முடிக்கப்பட்டதாக என் தாவாவில் சொல்லவில்லை.

5. அடகு வியாபாரத்திற்கு மேலும் பணம் தேவை ஏற்பட்டதால் பங்குதாரர்கள் அனைவரும் கூடுதல் தொகையாக முதலீடு செய்வது என தீர்மானிப்பட்டது என எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன்பிறகு முதலீடு ஏதேனும் செய்தீர்களா என்றால் பொதுமக்களிடமும், எங்களிடமும் நிறுவனத்தினர் பணம் பெற்றார்கள். நான் வைப்புத்தொகையாக ரூ.2,00,000/- நிறுவனத்திற்கு செலுத்தியுள்ளேன்.

6. நான் வைப்பீடு செய்த தொகைக்கு மாதம் மாதம் முறையாக வட்டி வழங்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு வட்டி வழங்கும்போது ரசீது பெற்றுக்கொண்டுதான் பணம் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். முறையாக பதிவேட்டில் பதிவு செய்துகொண்ட பிறகுதான் வட்டி கொடுப்பார்கள் என்றால் சரியல்ல. பெரும்பாலும் பேரேட்டு பதிவேட்டில் எழுதிக்கொண்டுதான் பணம் கொடுப்பது வழக்கம். வரவு செலவு கணக்குகளை பார்வையிடுவதற்கோ, நகல் எடுப்பதற்கோ பங்குதாரர்களோ, இயக்குநர்களோ ஆட்சேபணை ஏதும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, அவர்கள் பிரச்சனை செய்தார்கள்.

7. 51 பங்குதாரர்கள் யாரும் நிர்வாகத்தின் மீது கணக்கு காட்டவில்லை என்று புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் மீட்டிங்கில் சொல்லியுள்ளார்கள். ஒவ்வொரு மாதமும் நிர்வாக கூட்டம் மற்றும் உறுப்பினர்கள் கூட்டம் தனித்தனியாக நடைபெறும். அவ்வாறு கூட்டம் நடைபெறும் சமயத்தில் நிறை குறைகள் பற்றி விவாதிக்கப்படும் என்றால் நான் மட்டுமே நிறை குறைகள் சொல்வேன், மற்றவர்கள் யாரும் சொல்லவில்லை. நிர்வாகம் சரியான முறையில் நடைபெற்றதால்தான் மற்றவர்கள் யாரும் குறை சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, அவர்கள் ஆரம்பம் முதலே

உடன் பணி செய்தவர்கள் என்பதாலும், நண்பர்கள் என்பதாலும் குறை சொல்லவில்லை. 80 சதவீத உறுப்பினர்கள் 1-ம் பிரதிவாதிக்கு ஆதரவாளர்கள் ஆவார்கள்.

8. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 31-ம் தேதி லாப நஷ்ட கணக்கு சரிபார்த்து அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றால் ஒரு முறை கூட அவ்வாறு நடைபெறவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும், ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31-ம் தேதி லாப நஷ்ட கணக்கு சரிபார்த்து அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றால் சரியல்ல. ஒவ்வொரு ஆண்டும் 2 முறை பணம் தருவார்கள், ஆனால் லாபத்தில் அல்ல, விழா கொண்டாடுவதற்காக தருவார்கள். ஒவ்வொரு ஆண்டும் உறுப்பினர்களிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு ஈவு தொகை கொடுக்கப்படும் என்று சொன்னால் சரியல்ல, கொடுக்கின்ற பணத்திற்கு கையெழுத்து வாங்கிக்கொள்வார்கள். நானும் ஒவ்வொரு கூட்டத்திலும் தவறாமல் கலந்து கொள்வேன். அவ்வாறு கலந்துகொள்ளும்போது நான் வரவு செலவு கணக்குகள் என்னிடம் காண்பிப்பார்கள் என்றால் நான் கேட்பேன், ஆனால் அவர்கள் காண்பிக்கமாட்டார்கள்.

9. ஒவ்வொரு கூட்டத்திலும் நிறைவேற்றப்படும் தீர்மானத்தினை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்வேன் என்று சொன்னால் அவ்வாறு ஒரு தீர்மான நோட்டினை அவர்களை வைத்திருக்கவில்லை. நான் ஒவ்வொரு ஆண்டும் தீர்மான புத்தகத்தில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பைனான்ஸூக்கு எந்தெந்த வங்கியில் வங்கி கணக்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி விவரம் எனக்கு தெரியாமலே எனது வழக்குரையில் பைனான்ஸ் நிறுவனம் பல வங்கிகளில் கணக்குகளை துவங்கி OD மற்றும் OCC போன்ற கடன்களை பெறுவது என முடிவானது என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். OD மற்றும் OCC போன்ற கடன்களை லட்சுமி வாரி

பைனான்ஸ் நிறுவனம் ஒருபோதும் பெற்றதில்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

10. எனக்கு தெரியாத விஷயங்களை தாவாவில் கூறி 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு தாவாவில் மற்ற பிரதிவாதிகளையும் சேர்த்து நான் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. லட்சுமி வாரி பைானான்ஸை பொறுத்த வகையில் ஒரு பங்குதாரர் வெளியேறினால், அவர் செலுத்திய தொகைகளை சரிபார்த்து திரும்ப கொடுப்பது வழக்கம் என்று சொன்னால் அவர்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு உடனடியாக கொடுப்பார்கள், மற்றவர்களுக்கு கொடுப்பதில்லை. மற்றவர் என்று சொல்லும் நபர் யார் என்று சொன்னால் என்னுடைய மகனுக்கு கொடுக்கவில்லை. காலதாமதாக எனது மகனுக்கு பணம் கொடுத்ததாக சொல்வதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

11. லட்சுமி வாரி பைனான்ஸை பொறுத்த வகையில் பொதுமக்களிடம் டெபாசிட் தொகை பெற்றதில்லை என்று சொன்னால் சரியல்ல, பெற்றார்கள். பொதுமக்களிடம் டெபாசிட் தொகை பெற்றதாகா சொல்வதற்கு ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால் சரிதான். பொதுமக்கள் இல்லாமல் என்னை போன்ற உறுப்பினர்கள் தாமாக முன்வந்து வைப்பீடு செய்த தொகை அதிகம் என்றால் இருக்கலாம். நான் வைப்பீடு செய்த தொகையை நிதி நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்டேன். அதேபோல் நிதி நிறுவனமும் உறுப்பினர்கள் வைப்பீடு செய்த தொகையை மீண்டும் உறுப்பினர்களிடமே திருப்பி செலுத்திவிட்டது என்று சொன்னால் 2020 வரை செலுத்திவிட்டார்கள், அதன்பின்னிட்ட விவரம் எனக்கு தெரியாது. எனக்கு டெபாசிட் திரும்பி செலுத்தப்பட்ட விவரம் நன்கு தெரியும் என்றாலும், அவ்வாறு தெரிந்திருந்தும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு மன உலைச்சலை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

12. நிர்வாக பொறுப்பிலிருந்து T.K. இளங்கோவன், T.K. கணேசன் ஆகியோர் விலகினார்கள், நான் விலக்கப்பட்டடேன். நிறுவனமானது தற்போது 7 நிர்வாக உறுப்பினர்கள் மூலம் இயங்கப்பட்டு வருகிறது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ஏற்கனவே இருந்த மொத்த உறுப்பினர்களான 51 பேரில் எத்தனை பேர் விலகினார்கள் என்று எனக்கு தெரியாது. தற்சமயம் 28 உறுப்பினர்கள் உள்ளார்கள் என்று தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் கிடைத்த தகவலின்பேரில் தெரியவந்தது என்றால் சரிதான்.

13. விலகி சென்ற 23 பேரில் நான் மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மீதமுள்ள 22 உறுப்பினர்கள் அவர்களுக்குரிய தொகையினை பெற்றுக்கொண்டுவிட்டார்கள் என்றால் குறிப்பிட்ட தொகையை வாங்கிக்கொண்டு கையெழுத்து போட்டார்கள். மீதுமுள்ள உறுப்பினர்கள் லாப தொகையினை பெற்றுக்கொண்டுதான் கையெழுத்து போட்டுக்கொடுத்தார்கள் என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய ஆதங்கமே 1-ம் பிரதிவாதி சொல்லும் நபர்களுக்கு கடன் கொடுப்பதுதான் என்று சொன்னால் சரியல்ல.

14. 1-ம் பிரதிவாதி சொல்லும் நபர்களுக்குத்தான் கடன் கொடுப்பார்கள் என்று நான் எனது வழக்குரையில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் படித்தவர் என்பதால், என்னை நிறுவனத்தில் முன்னிலைப்படுத்தாததால் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஒருவருக்கு கடன் கொடுப்பது பற்றி நிர்வாக பங்குதாரர்தான் முடிவெடுப்பார் என்று சொன்னால் சரிதான், அவராகவே கொடுப்பார். 1-ம் பிரதிவாதி தன்னிச்சையாக செயல்படுவார் என்று நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. T.K. இளங்கோவன் 28-02-2019-ல் பங்குதாரராக இருந்து விலகிவிட்டார். ஒவ்வொரு வருடமும் வட்டி தொகை ரூ.30,00,000/-த்தை கணக்கில் காட்டவில்லை என்று சொல்வதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. ஸ்ரீ லட்சுமி வாரி

பைனான்ஸ் நிறுவனம் புதுப்பிக்கப்படவில்லை என்பதற்கு ஆதாரமாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

(1 முதல் 12, 15 முதல் 18, 20 மற்றும் 28 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.08.19 17:42:13 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**